# 'அஞ்ஞாடி நாவலி'ன் நாடார் சமூகத்தின் இனவரைவியல் கூறுகள்

*ப.மாரியம்மாள்*
*ஆய்வியல் நிறைஞர் (தமிழ்த்துறை)*
*சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*ஒட்டன்சத்திரம்*

**முன்னுரை**

நாட்டுப்புறவியல் என்பது பல்வேறு வளங்களைக் கொண்ட ஒரு பழமைப்பெட்டகம். அதைத் தோண்டத் தோண்டப் பலபுதிய பொருண்மைகள் கிடைத்த வண்ணம் உள்ளன. "நாட்டுப்புறவியல்" ஆய்வுகள் இன்று பல்வேறான வளர்ச்சி நிலைகளைக் கண்டுள்ளன. இவ்ஆய்வு பலதுறைச் சார்ந்த இணைப்பு ஆய்வாகவும் வளர்ச்சியடைந்துள்ளன. நாட்டுப்புற மக்களின் வழக்காறுகள் சமூக பண்பாட்டுக் கூறுகளை ஆராய்வதற்குக் காரணியாக விளங்குகின்றன. இன்று மானிடவியலாரும் சமூகவியலாரும் பண்பாட்டினைப்பற்றிப் பலகோணங்களில் ஆய்ந்து வருகின்றனர். ஓர் இனத்தாரைப்பற்றி ஆராயும் மானிடவியலாருக்கு அவர்களது பழக்கவழக்கங்கள், பண்பாடு முதலியவற்றைக் காட்டும் அவர்களின் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், ஆடல்கள் முதலியவற்றைப் பற்றியும் அறிந்திருந்தால்தான் அவர்களது இனவியல் வாழ்வு முறையைத் தெளிவாகவும், விரிவாகவும் வரையறுத்துக் கூறமுடியும். இந்நாட்டார் வழக்காறுகள் வரலாற்றை அறியவும், பண்பாட்டைக் கட்டமைக்கவும், சமூக அமைப்பை ஆராயவும் துணைபுரிகின்றன.

**நாட்டார் வழக்காறு**

ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு கூட்டமாக வாழ்கின்ற பொழுது அவர்களின் இனம், மொழி, பண்பாடு சார்ந்த பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் அவற்றிற்கான விழுமியங்கள் போன்றவை வழக்காறுகளாக உருக்கொள்கின்றன. நிலத்தை அடிப்படையாகக் கொண்ட நாட்டுப்புற மக்களிடையே இத்தகைய வழக்காறுகள் அதிகமாக இருப்பதைக் காணமுடியும். இவை அவர்களின் வாழ்வியலோடு தொடர்புடைய வெளிப்பாடுகளில் இலக்கியமாகவும், கலைகளாகவும், நம்பிக்கையாகவும், சடங்குகளாகவும், கொண்டாட்டங்களாகவும் வெளிப்படுகின்றன. இத்தகைய வெளிப்பாடுகளில் இனவரைவியல்சார் (இனக்குழு) கூறுகள் இனத்துக்குரிய மனித இனப்பிரிவு சார்ந்த மனித இனம் ஆராய்ச்சிகளில் எவ்வாறு இடம் பெற்றிருக்கின்றன என்பதை ஆராய்தல் அவசியமாகின்றது.

**இனவரைவியல்**

உலகில் எண்ணிலடங்கா வகையில் பரவி வாழும் சமுதாயங்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவே பண்பாட்டு மானிடவியலாகும். இதன் தலையாய பிரிவுகள் இரண்டு. அவை இனக்குழுவியல் மற்றும் இனக்குழு ஒப்பாய்வியல் ஆகும். இவற்றில் இனக்குழுவியல் பிரிவு ஒவ்வொரு தனிப்பண்பாட்டைப் பற்றி (அ) ஓர் இனக்குழுவைப்பற்றி முழுமையாக ஆராய்ந்து விவரிக்கக்கூடியது. 'இனக்குழுவியல்' என்னும் பொருளுடைய "Ethnography" என்னும் ஆங்கிலச் சொல் "Ethnos"> "Graphein" ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெறுகின்றது.

Ethnos - இனம் (Race - இனக்குழு) Ethnic group - மக்கள் Graphein - வரைதல் (எழுதுதல்). ஆகவே இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப்பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது.

**இனவரைவியற் கூறுகள்**

குடும்ப அமைப்பு, திருமணமுறை, உறைவிடமுறை, வாழ்வியற் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்கமுறை (Enculturation), மக்களின் உளவியற்பாங்குகள், கைவினைத் தொழில்கள் சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சடங்குகள், (Customary Laws) சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், விழாக்கள், இசை, விளையாட்டுக்கள் போன்றவை சார்கூறுகள் நாட்டார் வழக்காறுகளில் அதிகம் இடம் பெற்றுள்ளன.

**நாடார் குறித்த கால்டுவெல் விளக்கம்**

கால்டுவெல் சாணார்கள் பிறப்பிலே பழங்குடியினர் என்கிறார். மேலும் சாணார் சமூகத்தவர்கள் இலங்கையிலிருந்து பனையேறிப் பிழைப்பதற்காக வந்தவர்கள் என்றும், இந்து சமயத்தின் உயர்ந்த நிலையில் இருந்ததேயில்லை என்றும், சிறுதெய்வ வழிபாட்டினையே பின்பற்றி வருகிறார்கள் என்றும் கூறுகிறார். ஒடுக்கப்பட்;ட சாதிகளில் உயர்ந்த அடுக்குகளைச் சேர்ந்தவர்கள் என்றேதான் இவர்களை வர்ணிக்க முடியும் என்கிறார்..

'நாடான்' என்ற சொல் 'நாடாள்வர்' என்னும் பொருளுடைத்தது. 'சாணார்' என்ற வழக்கு இழிவாகக்கருதி 'நாடார்' என்றே பயன்படுத்தினர்.

நாடார் சாதியில் 5 உட்பிரிவுகள் உள்ளன

1. நாடாள்வான், நாடான் என்ற பட்டங்களுக்குரிய நிலைமைக்காரர்.
2. முக்கந்தர் அல்லது முக்கந்தநாடார்.
3. சிறுகுடிச் சாணார் அல்லது நாட்டாத்திகள்.
4. மேனாட்டார், கள்ளச்சாணார் ஆகிய பெயர்களைக் கொண்ட சேர்வைக்காரர்
5. மூப்பன், மூப்பர் (தலைமைக்காரன் என்ற பட்டங்களுக்குரிய நாடார்)

கி.பி.ஏழாம் நூற்றாண்டுவாக்கில் கேரளப்பகுதியில் குடியேறிய நம்பூதிரிகள் பூமியிலுள்ள கடவுள்கள் தாங்கள் என்று சொல்லி அரசர்களும் பிறரும் மதிக்கும் வண்ணம் உயர்வு பெற்றுவாழ்ந்தனர். கோவில்களில் சென்று வணங்க இறைவழிபாடு மறுக்கப்பட்டிருந்தது. கோவில் தெருக்களில் நடக்க அனுமதி மறுக்கப்பட்டது. மேற்கூறிய கொடுமை அரசு அனுமதியோடு 1850ம் ஆண்டுகள் வரை தொடர்ந்தன. அதற்கு பின்னரும் நடைமுறையில் இருந்து வந்தன. இதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பான்மையினராக வாழும் பனையேறி நாடார் சமுதாயத்தினரும், கேரளாவில் ஈழவர் என்று அழைக்கப்படும் தமிழக இல்லத்துக்குப் பிள்ளைமார் சமூகத்தினரும் ஆவர். நாடார் சமூகத்தில் பெண்களுக்கு முழு உரிமை இருந்தது. நாயர் போன்ற சூத்திர சாதியினருக்கும் கீழே ஆனால் தீண்டத்தகாதவர்களுக்கு சிறிது மேலே என்னும் சமூகக் கட்டமைப்பில் இருந்தனர். நாடார்கள் ஆரியசத்திரியர்கள் பாண்டிய, சோழ பரம்பரையில் வந்தவர்கள். தட்சின ரிஷி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். நாடார்களின் பிரிவில் தேவகன்னிகளுக்கும் சத்திரிய மகரிஷிக்கும் பிறந்த ஏழு குழந்தைகளை பத்திரகாளிஅம்மன் எடுத்து வளர்த்ததாகவும் அவர்களிலிருந்தே நாடார் சமூகம் தோன்றியதாகச் சொல்கிறது. நாடார்களின் பிரிவில் விவாகரத்து, விதவை, மறுவிவாகம் கிடையாது. மறவர்கள் நாடார்களுக்கு பல்லாக்குச் சுமந்திருக்கிறார்கள். அஞ்ஞாடி நாவலில் நாடார் சமூகத்தின் இனவரைவியல் கூறுகளை ஆராய்ந்து அறிந்து கொள்வதே இக்கட்டுரையின்; நோக்கம் ஆகும்.

**நாடார் சமூகத்தின் வரலாறு**

நாயக்கர்களின் படையெடுப்பால் அதிக இன்னல்களுக்கு ஆளான நாடார்கள் தங்கள் பூர்வீக பூமிகளான சிவகாசி, கமுதி, விருதுநகர், மதுரை ஆகிய ஊர்களைவிட்டு வெளியேறி திருச்செந்தூர் போன்ற வறண்ட பகுதிகளுக்கு இடம் பெயர வேண்டியதாயிற்று என்றும், அங்கு பனை மரங்களிலிருந்து பதனீர் இறக்கி வாழ்க்கை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. பதனீர் இறக்கி வாழ்ந்த காலம் இவர்களின் இருண்டகாலமாகக் கருதப்படுகிறது.

இச்சமுதாயத்தினரைக் குறிக்கும் சாணார், நாடார் போன்ற சொற்கள் சான்றார், சான்றோர், நாடாள்வார் ஆகிய சொற்களில் இருந்து மருவியவை ஆகும். நாடார்கள் பதனீர் இறக்குபவர்கள் மட்டுமின்றி, அவர்களிடையே கற்றறிந்தோரும், போர்வீரர்களும், வர்த்தகரும் இருந்தனர்.

**குடும்ப அமைப்பு**

தேவையின் அடிப்படையில் கூடி வாழ்வது சமூகம் என்பர். "மனிதன் ஒருசமூக விலங்கு" என்றார் கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில். எனவே சமூகம் என்பது ஒருவர் தேவையை மற்றவர்மூலமாகப் பூர்த்தி செய்து வாழும் கூட்டு வாழ்க்கையாகும். நாடார்கள் இனம் ஒற்றுமையாக ஒரே குடும்பம் போல் வாழ்ந்து வந்தனர். அதனை அஞ்ஞாடி நாவலில் இடம்பெற்றுள்ள ஒரு நாடார் குடும்ப அமைப்பினைக் கொண்டு விளக்கலாம் .

“மூத்தவன் சிவசங்கு, நடுவுளவன் சின்னக்கருப்பன் மூணாவது சண்முகம் அக்கா தங்கச்சி கிடையாது சின்ன வயசிலேயே தாயும் தகப்பனும் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். குடும்பத்தில் சிவசங்குதான் தகப்பன் சகலமும் அவன் பொறுப்பு. எதனாலும் அவன் சொன்னால் சரி. பூர்வீக ஊர் அய்யாபுரம். ஊரைச்சுற்றி நிற்கும் பனைகளைப் பொதுவில் கவனித்துப் பனைவாரம் கொடுத்துவந்தவர்கள். மூவரும் விட்டுக்கொடுத்து தொழில் செய்தனர். சிவசங்கு, சின்னக்கருப்பனுக்கும் மணமுடித்தனர். பின்பு சண்முகத்துக்கு கழுகுமலை பெரிய நாடாரின் மகள் மாலையம்மாவை முடித்தனர்”.

மூத்தவன் பனைகளை எண்ணி மூணாகப் பகிர்ந்து தனித்தனியாகத் தொழிலைத் தொடங்கினர். பதினியை விற்று பகிர்ந்து கொள்வார்கள். பதினி, கருப்பட்டி காய்ச்சினர். அண்ணன்களின் மனைவிகளுக்குள் சிறுசிறு சண்டைவந்து பாளை அரிவாளால் வெட்டிக்கொண்டு இறந்தார்கள். பிறகு சண்முகம் பெரிய நாடாரை வைத்து பனைஓலை வேலையைப் பார்த்தான். மாலையம்மாளின் அண்ணன் அம்மமுத்து உதவிசெய்தான். பனைவேலை ஓய்ந்தது. பனையேறத் தவிப்பாக இருந்தது. மூன்று பிள்ளைகளைக் கொண்டு திணறுகிறார்கள். சண்முகம் வேறு வேலைக்கு சென்றான். கவலையில் வயிற்றுப்போக்கில் இறந்தான். பஞ்சத்தினால் மாலையம்மாளும் இரண்டுபிள்ளைகளும் இறந்தனர். நடுவுளவன் தங்கையா கழுகுமலையில் வளர்ந்தான்.

**உறைவிட முறை**

நாடார்கள் பனந்தோப்பை வாரத்துக்குப் பிடித்துத் தொழில் செய்தனர். தோப்பு ஊரில் இருந்து தூரம். ஆதனால் தோப்பிலேயே குடிசைகள் போட்டுக் குடியேறி தொழிலைச் செய்தனர். கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தனர். பின்பு சண்முகமும் மாலையம்மாவும் பெரிய நாடாரின் மூலம் கலிங்கலைச் சேர்ந்த ஆண்டியிடம், தொழிலைப் பார்ப்பதற்குத் தொழுவு வீட்டில் குடியேறினர். பஞ்சத்தில் பெரிய நாடார் குடும்பம் துவண்டு நிமிர்ந்து விட்டது.

கூந்துப்பானையில் மணலரிசி, மண்பருப்பும், ஆவரம்பூப் பொரியல் ஓலை அகப்பையில் சோற்றைக் கிண்டி சமைத்து உண்டனர். பனங்கிழங்கு அவித்து சாப்பிடுவர். கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்து வியாபாரத்தில் ஈடுபட்டு பேட்டைக்கருகில் குடியேறினர். மதுரை,கமுதி, திருத்தங்கல் போன்ற ஊர்களில் நிரந்தரமாகக்; கடைகளை உண்டுபண்ணிக் கூட்டம் கூட்டமாகக் குடும்பத்துடன் குடியேறினர். பனையேறிப் பிழைப்பு நடத்திய நாடார்கள் அந்தத் தொழிலை உதறிவிட்டு விவசாயத்திலும் இறங்கினர். பணப்பயிர்கள் தொழிலில் நல்ல வருமானம் கிடைத்தது. தனியாகச் சொந்தமாக வீடுகட்டிக் குடும்பங்களாகப் பெருகிப் பெரிய நாடார் குடும்பமாக வாழ்ந்தனர்.

**கைவினைத் தொழில்கள்**

பனையோலைகட்டுதல், பனையேறுதல் பதினி, கருப்பட்டி காய்ச்சுதல் போன்ற தொழில்களைச் செய்தனர். தோப்பிலுள்ள தென்னைகளையும், பனைகளையும் நம்பி வாழ்ந்தனர். தோப்புகளை குத்தகைக்குப்பிடித்து உழைத்தார்கள் பனையும் தென்னையும் பயிரிட்டு அதில் கள் இறக்குவது சாணார்களின் பரம்பரைத் தொழில் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. நாடார் சமூகத்தினருள் தென் மாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்கும் வடமாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்குமிடையே பழக்க வழக்கங்கள் மாறுபட்டுள்ளன. சிலர் விவசாயம், கட்டிடத்தொழில் செய்தனர். சிலருக்குச் சொந்த நிலமும் இருந்தது.

**சமூகக் கட்டுப்பாடு**

நாடார் சமூகப்பெண்கள் பொன்னிலும் வெள்ளியிலும் நகைபோட்டுக் கொள்ளக்கூடாது. இடுப்பில் தண்ணீர்க்குடம் கொண்டு போனால் தப்பு, தோளில் சீலை போடாமல் மூடாத மார்புடன்தான் நடக்கனும், கோயிலுக்குள் நுழைவதற்கு தடைவிதித்தனர். மலையாளத் தேசம் நாகர்கோயிலுக்கு மேற்கே கல்வளையில் இவ்வாறான நடைமுறை இருந்தது. பணக்காரர்களுக்கு அடிமைகளாகயிருந்து ஊழியம் செய்தனர். கடவுளுக்கு சமமான மரியாதை கொடுக்கனும், தவறினால் அனுபவிக்கும் கொடுமை சொல்லமுடியாது. நாடார் இனமக்கள் கீழ்சாதிக்காரர்களாக நடத்தப்பட்டனர். தென்னை பனை அத்தனைக்கும் சர்க்கார் போட்ட வரி கட்டியாகணும். வீட்டுவரி, தீபாவளி வருசப்பிறப்பு

ஒவ்வொரு திருவிழாவுக்கும் வரி, சொத்துவரி, செத்துப்போனவர்களுக்கும் வரி வசூலித்தனர்;. வரிக்கொடுமையால் மேல் சாதிக்காரர்களுக்கு ஊழியம் செய்தனர். சில பணக்கார நாடார்களும் மேல்சாதிக்காரர்களைப் போலவே நடத்தனர். தங்களை நாடான்கள் என்று உயர்வாகச் சொல்லிக் கொண்டனர். ஏழை நாடார்கள் எல்லா விதத்திலும் தாழ்ந்தவர்களே என்று கூறி இழிவாக நடத்தினர்;.

**சமய நம்பிக்கைகள்**

நாடார்கள் கோயிலுக்குள் நுழைவதற்கு தடைவிதித்தனர். நாயர்கள் பெண்களை அடிமைப்படுத்தினர். வரிக் கொடுமைகள், மார்புக்கு கூட வரிக்கட்டினர்.

வேதச்சாமியார்கள் கிறிஸ்துவமதத்திற்கு மாறுவதற்கு பிரசங்கம் செய்தனர் மேலாடை அணிந்து கொள்வதற்காகக். கொஞ்சம் கொஞ்சமாக கிருஸ்துவ மதத்திற்குப் பெண்கள் மாறினர். நாடார் வீட்டு பிள்ளைகள் கோயில்களிலியே பள்ளிக்கூடம் படித்தனர். வேதக்கோயில்கள் முளைத்தன. பெண்கள் முக்காடிட்டுச் செபித்தார்கள். வேதச்சாமியார்களைக் கண்டித்து சர்க்காருக்கு முறையிட்டனர். வேதம் மாற்றங்களை உண்டாக்கியது. வேதக்காரர்கள் மேல்சாதிக்காரர்களுக்குச் செய்துவந்த ஊழியத்தைப் படிப்படியாக நிறுத்திக் கொண்டார்கள். பல ஊர்களில் கோயிலுக்குள் நுழைய முயற்சி செய்தனர் மேல்சாதிக்காரர்கள் தடுத்தனர். ஆகவே கைகலப்பு ஏற்பட்டது. சாதாரண நேரத்திலுங்கூட மோதிக் கொள்ளுமளவுக்கு பகை வளர்ந்தது. நாடார்கள் சர்க்காருக்கு முறையிட்டார்கள். பனையேறும் தொழிலைச் செய்துவந்த பனையேறி நாடாா;, நாயர், ஈழவர், பரவர், முக்குவர், புலையர் உட்பட 18 சமுதாயத்தைச் சார்ந்த பெண்கள் தோளுக்கு மேல் குறுக்காக அணிய அனுமதிக்கப்படவில்லை. இதற்கு தோள்சீலைப் போராட்டம் எனப்பட்டது. நாடார் சமூகம் வாழ்ந்தபல இடங்களில் கலகம் மூண்டது. சிலர் கொல்லப்பட்டனர். சிவகாசிக் கலவரத்தில் பாதுகாப்பு கருதி நாடார்கள் இஸ்லாமிய குடியிருப்பு பகுதியில் தங்கினர். பின்னர் பலர் இஸ்லாம் மதத்திற்குப் மதமாற்றம் செய்யப்பட்டனர்.

**வாழ்வியற் சடங்குகள்**

நாடார்கள் மேல்சாதிக்காரர்களைப் போல் நடந்து கொண்டனர். பல ஊர்களில் கறி தின்னாமல், சைவ சாப்பாடு, பிராமணர்களை போல் குடுமி, முழு தார்ப்பாய்ச்சி, பூனூல் போட்டனர் வெள்ளாளர் பிராமணர் மாதிரி இருந்தனர். மீண்டும் கோயிலுக்குள் போகவில்லை.அடிதடி நடந்தது. நாடார்கள் பழைய நிலைக்கு வரநாளானது. ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலிச் சீமைகளிலும் தொடர்ந்தது. சாமியார்கள் நாடார் குலப்பெண்களுக்கும், வயதானவர்களுக்கும் வியாகுல மாதா கோயில் ஆலயத்தில் உதவிசெய்தனர். நாடார்கள் கொடுத்த வழக்குகள் தள்ளுபடி ஆனது. மேல் சாதிக்காரர்கள் இந்துக்காரர்கள் நாடார்களை மிதித்து நசுக்கிவிட்டதாகக் கெம்பிரியம் பேசினர்.

**வழிபாட்டு முறைகள், விழாக்கள்**

நாடார்கள் நிறைந்த சிவகாசி விரைவிலேயே பணக்கார நகரமாக மாறியது. சிவகாசியிலும் வேதம் செழித்து வளர ஆரம்பித்தது. இந்துக்கார நாடார்கள் பலர் கடும் எதிர்ப்புக்கிடையே வேதத்துக்கு மாறினார்கள். சிவகாசியில் விசுவநாதர் கோயில் சுந்தரேசுவரர், கோயிலுக்குள் நாடார்கள் நுழைந்து மூலவரைத்தொட்டு வணங்கினர். மேல்சாதிக்காரர்கள் வழக்கு விதித்தனர். பிரச்சனையோடு நாடார்களின் கோயில் திருவிழா நடந்தது. சிவகாசியில் நாடார்களுக்கும், பிற சாதிக்காரர்களுக்கும் கலகம் நடந்தது. வீடுகள் கொளுத்தப்பட்டன. கொள்ளை கொடுமை நடந்தது. குடும்பமார் நாடார்கள் மேல் பகையை வளர்த்துக் கொண்டனர்.

**பெண்களின் நிலை**

சிவகாசிக் கலகத்திலும் அதற்கு முன்பும், விடுதலைக்கான போராட்டத்திலும் பெண்கள் பெரும் துயரத்திற்கு ஆளாகினர். கலகத்தில் நாடார் பெண்களைப் பிடித்து நெற்றிப் பொட்டை அழித்தனர். ஆடைகளைக் களைந்து பர்தாவை அணிவித்து அல்லாவின் பிள்ளைகளாக்கி அழகு பார்த்தனர். மார்பில் பிறையைப் பொறித்தார்கள். இன்னொருபுறம் துலுக்கப் பெண்களின் பர்தாக்கள் நெருப்பில் கருகின. வெற்று நெற்றியில் குங்குமம் ஏறியது. கழுத்தில் துளசி மாலை, கை, கால், தொடைகளில் பச்சைக் குத்தினார்கள். திரிசூலம், வேல் அபயக்கரம் இருபுறமும் விலங்குகளைப்போல் பெண்களை வெட்ட வெளியில் கிடத்தி ‘‘உன்கருவில் என் வாரிசு’’ என்று உரக்கக் கூவியபடி கூட்டு வழிபாடாகப் புணர்ந்தார்கள். கர்ப்பிணிப் பெண்களை விட்டு வைக்கவில்லை. வயிற்றைப் பிளந்து சிசுவைக்

கொன்று "வருங்கால எதிரி ஒழிந்தான்" என்று வெற்றிக்களிப்பில் சுற்றிச் சுற்றிக் கூத்தாடினர். பெண்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள தீயில் மாண்டனர் . பெண்கள் மார்புக்கு வரி கட்டினர். மார்புகளை அறுத்து வீசி எறிநதனர். கொடுமைத் தாங்காமல் பெண்கள் உயிர் விட்டனர் .நாடார்களுக்கும், கலகக்காரர்களுக்கும் துப்பாக்கிச்சூடு நடந்தது. பெண்கள் தோளில் சீலை போடாமல் மூடாத மார்புடன் தான் நடக்கணும். வரி கொடுக்காதவர்களை முதுகில் கல்லேற்றிச் சுமக்க வைத்தனர், சுடும் மணலை தலையில் ஏற்றினர். வரிக்கொடுமை ஒருபுறமிருக்க மேல்சாதிக்காரர்களுக்கு ஊழியம் செய்தாக வேண்டிய நிலை இருந்தது. நாடார்குல பெண்கள் தங்களின் பாதுகாப்புக் கருதி கொஞ்சங்கொஞ்சமாக வேதத்துக்கு மாறினார்கள். நாடார்குலப் பெண்கள் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தனர். கோயில்களிலேயே பெரும்பாலும் பள்ளிக்கூடம் நடந்தது. தோள் சீலை போடாதப் பெண்கள் வேத கோயிலுக்குள் முக்காடிட்டு செபித்தார்கள்.

## முடிவுரை

இன வரைவியல் என்பது உலகில் எண்ணிலடங்கா வகையில் பரவி வாழும் சமூதாயங்களின் பண்பாட்டை காலப்பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவாகும்.

இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்டஇனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது.

'நாடான்' என்ற சொல் நாடாள்வர் என்னும் பொருளுடைத்தது. அஞ்ஞாடி நாவலில் நாடார், சாணார் என்ற சொல்லாட்சியிலே நாடார் சமூகம் குறித்து பேசப்பட்டுள்ளது.

தொழில், அடிமை முறைக் காரணமாகப் பல இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களாக நாடார் காணப்படுகின்றனர்.

கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்தனர். பனையோலை குடிசை வீட்டில் இருந்து வளர்ச்சி அடைந்து பெரிய பெரிய வீடுகளில் ஊருக்கு நடுவே வாழ்க்கை நடத்தினர்.

பனையோலை கட்டுதல், பனையேறுதல், பதனி, கருப்பட்டி காய்ச்சுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர்.

பெண்களுக்கு நிறைய சமூகக் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டன. தோள் சீலை அணியக்கூடாது. பொது வெளியில் செல்லக் கூடாது. திறந்த மார்பகங்களுடன் காண வேண்டுமென்பதாகும். ஆண், பெண் இருபாலருக்கும் வரிக்கொடுமையால் அடிமைமுறை, கோவில்நுழைவு கூடாது, பொதுவிடங்களில் ஊர்வலம் செல்லக்கூடாது என கட்டுப்பாடு மேல்சாதிக்காரர்களால் விதிக்கப்பட்டு இருந்தனர்.

இந்து, கிருஸ்துவம், இஸ்லாம் சமயத்தின் நம்பிக்கையைப் பின்பற்றினர். தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக்கொள்வதற்கு நாடார்கள் மாமிச உணவு உண்ணாமை, பூணுநூல் அணிதல், குடுமி வைத்தல் என மேல்நிலையாக்கம் செய்ய முயற்சித்தனர்.

கோயில் நுழைவுப் போராட்டத்தில் சிவகாசியில் உள்ள விசுவநாதர், சுந்தரேஸ்வரர் கோவில் வழிபாட்டு முறையைப் பின்பற்ற முயற்சி செய்தனர். பிற மதமாற்றத்திற்குப் பின்பாகக் கிருஸ்துவ வழிபாட்டு முறை, விழாக்களையும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

நாடார் பெண்களின் நிலை ஆரம்ப காலக்கட்டத்தில் அடிமைமுறையில் இருந்தது. தோள் சீலை, மார்பிற்கு வரி கட்டுதல், பொது வெளியில் அடிமைப்படுத்துதல், நிர்வாணமாக்குதல், கூட்டுப்புணர்ச்சி போன்ற இழிநிலையிலிருந்து, மதமாற்றத்திற்குப்பின் தோள்சீலை அணிதல், முக்காடிட்டுச் செல்லுதல், கல்விகற்றல் போன்ற மேன்மைநிலை அடைந்தனர். அந்த வகையில் அஞ்ஞாடி நாவலின் நாடார் சமூகத்தின் இனவரைவியல் கூறுகளைக் கண்டு ஆராயப்பட்டுள்ளது.

## பார்வை நூல்கள்


1. பூமணி, அஞ்ஞாடி.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல்.
3. பக்தவத்சல பாரதி, தமிழ் மானுடவியல்.
4. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஆய்வுக்கோவை, தொகுதி-4.